**தலைப்பு 163 - உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 163 - உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 15 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேனுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 4,412.94 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1,324.13 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 3,088.81 மில்லியன் அதாவது 69.99 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 889.20 | 820.48 | 68.72 | 7.73 |
| மூலதனம் | 3,523.74 | 503.65 | 3,020.09 | 85.71 |
| மொத்தம் | 4,412.94 | 1,324.13 | 3,088.81 | 69.99 |

**2.2 முற்பணக் கணக்கு**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 16301 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** |
| **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| 34.00 | 29.88 | 16.00 | 25.13 | 100.00 | 81.70 |

**2.3 பொது வைப்புக் கணக்கு**

அமைச்சின் கீழுள்ள 6000/0000/00/0015/0054/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 25.17 மில்லியன் ஆகும்.

**2.5 கணக்காய்வு அவதானிப்புகள்**

உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

அமைச்சினால் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாக்காப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

**3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

16301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றுக்கும் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் இடையே 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியில் ரூபா 1,702,288 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய கடன் மீதியில் வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 276,160 தொகையும், இராஜினாமாச் செய்த உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 98,130 தொகையும், சேவையை விட்டு விலகிய உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 150,623 தொகையும், மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 101,300 தொகையும் மற்றும் பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 50,300 தொகையும் உள்ளடக்கிய ரூபா 677,439 கூட்டுத்தொகையான கடன் மீதி 4 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவை மீதியை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

அமைச்சிற்குரிய 10 பழைய வாகனங்கள் 1½ வருடம் முதல் 5 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த வாகனங்கள் தொடர்பாக 2009 நவம்பர் 14 ஆந் திகதிய 438 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. சொத்துக்கள் குறிப்பிட்ட பிரகாரம் கைதவிர்க்கப்படாமையினால் அரசாங்கத்திற்கு பெறக்கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்கள் துருப்பிடிப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அமைச்சினால் பிரதான அலுவலகத்தினதும், 34 பிரதேச கலாசார நிலையங்களினதும் பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப்பிரமாணம் 757(2) மற்றும் 1647(அ) இன் பிரகாரம் அமைச்சிற்குச் சொந்தமான சகல வாகனங்கள் தொடர்பாகவும் மெய்மையாய்வு நடாத்தி அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### (இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

அமைச்சினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 215,574,452 ஆக இருந்ததுடன் அவை 01 வருடத்திற்குக் குறைந்த காலமாக கொண்டுவரப்படுகின்ற பொறுப்புக்களாகும். 03 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 26,764 தெகையான

சேமிப்பினை விஞ்சி மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 403,978 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**(ஈ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

2016 யூன் 24 ஆந் திகதியளவில் 185 கலாசார நிலையங்கள் காணப்பட்டதுடன் அதில் 8 நிலையங்கள் மாத்திரம் காணியின் உரித்து அமைச்சிற்குச் சொந்தமாகக் காணப்பட்டதுடன் மற்றைய 177 நிலையங்களின் உரித்து அமைச்சிற்குச் சொந்தமாக இருக்கவில்லை.

**3.4 இணங்காமைகள்**

2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சரின் பதவியணியினர் கைவிரல் அடையாள இயந்திரத்தின் மூலம் கடமைகளுக்கான வருகை மற்றும் வெளியேறுகைகள் உறுதிப்படுத்தப்படாமல் கூட்டுமொத்தமாக ரூபா 4,479,996 தொகை சம்பளம் மற்றும் படிகளாகவும், ரூபா 823,990 கூட்டுமொத்தமாக மேலதிக நேரம் மற்றும் பிரயாணச் செலவினங்களாகவும் செலுத்தப்பட்டிருந்தன.

**3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அலுவலர் ஒருவர் பிரத்தியேக செயலாளராக 2015 சனவரி 16 ஆந் திகதி முதல் 2015 யூலை 30 ஆந் தகிதி வரையிலான காலத்தில் கூட்டுமொத்தமாக ரூபா 284,360 சம்பளம் மற்றும் படிகளாக அமைச்சிலிருந்து பெற்றிருந்ததுடன் அந்தக் காலப்பகுதிக்குரிய அந்த உத்தியோகத்தர் மத்தியமாகாண சபை உறுப்பினரொருவராகவும் செயற்பாட்டு படியாக ரூபா 311,902 தொகை மத்திய மாகாண சபையிலிருந்தும் பெற்றிருந்தார்.

(ஆ) அமைச்சரின் பொதுமக்கள் இணைப்பு உத்தியோகத்தருக்கு 2015 சனவரி 16 ஆந் திகதி முதல் 2015 யூலை 30 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரியதாக அமைச்சிலிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 411,090 சம்பளம் மற்றும் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. மத்திய கலாசார நிதியத்தின் கீழ் நிர்வாகிக்கப்படுகின்ற கலாசார பாதுகாப்புக் கம்பனியின் பணிப்பாளராக அந்த பெண் உத்தியோகத்தர் சேவையாற்றி அக் காலத்திற்குரியதாக கூட்டுமொத்தமாக ரூபா 300,000 சம்பளம் மற்றும் படிகளாக அக் கம்பனியிலிருந்து பெற்றிருந்தார்.

(இ) அமைச்சிற்குச் சொந்தமான உத்தியோகபூர்வ வாகனமொன்றிற்காக மாதத்திற்கு ஒரு தடவை வாகனத்தின் பிரேக் முறைமையில் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்காக 2013 ஆம் ஆண்டு முதல் 2015 யூலை 30 ஆந் திகதி வரை மாதமொன்றிற்கு ரூபா 51,204 வீதம் 20 மாதங்களுக்காக ரூபா 1,024,080 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு காரணமாக சொகுசு வாகனமொன்றாக இருந்தமையால் அவ்வாறான பழுதுபார்த்தலொன்று தேவைப்பட்டதாக அமைச்சின் செயலாளர் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார். இருந்த போதிலும், அந்த வாகனம் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தின் போது சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளின் பிரகாரம் பிரேக் முறைமையில் அவ்வாறான பழுதுபார்த்தலொன்று தேவைப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 யூன் 07 ஆந் திகதி முதல் யூன் 17 ஆந் திகதி வரை சீனாவில் நடைபெற்ற "Management of The Museum as a NonProfit Organization" பாடநெறிக்காக சிரேஷ்ட முகாமையாளர்கள் பங்குபெற வேண்டியிருந்த போதிலும் சுவடிகள் கூடத் திணைக்களத்தில் அமைச்சுச் செயலாளரின் சிபாரிசின் அடிப்படையில் சிரேஷ்ட முகாமையாளர்கள் அல்லாத இரண்டு உத்தியோகத்தர்கள் பங்குபற்றச் செய்யப்பட்டு அமைச்சினால் ரூபா 114,400 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே 2015 யூன் 26 ஆந் திகதி முதல் யூலை 15 ஆந் திகதி வரை சீனாவில் நடைபெற்ற "Seminar for Directors of Festival From Developing Countries" செயலமர்விற்காக பணிப்பாளர்களுக்குப் பதிலாக அமைச்சுச் செயலாளரின் சிபாரிசின் அடிப்படையில் அபிவிருத்தி உதவியாளரொருவர் பங்குபற்றியிருந்ததுடன் அதற்காக ரூபா 84,300 தொகையும் செலவிடப்பட்டிருந்தது.

(உ) அமைச்சிற்கு எந்தவித தொடர்புமில்லாத வெளிக் கலை நிறுவனமொன்றின் நடனக் குழுவொன்று கல்கத்தாவில் சர்வதேச நடன விழாவிற்கு பங்குபற்றச் செய்வதற்கான விமானப் பயணச் சீட்டிற்காக ரூபா 187,200 தொகை அமைச்சினால் செலவிடப்பட்டிருந்ததுடன் அப்பிராயணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்காக அந்த நிறுவனத்தினால் கோரப்பட்டிருந்த கூறுவிலையின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை ரூபா 323,197 தொகையான கொடுப்பனவு மற்றும் ரூபா 23,836,940 தொகையான கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டு நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட அனுராதபுரம் பொழுதுபோக்கும் கலையரங்கம் தொடர்பாக பின்வரும் பிரதான குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) அமைச்சரவை அங்கீகாரம் காணப்படாமை
(ii) சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படாமை
(iii) காணியின் உரித்து தீர்க்கப்படாமை

## 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அனுராதபுரம் பொழுதுபோக்கு கலையரங்கம் நிர்மாணித்தல் தொடர்பாக கொள்வனவுக் குழுவினால் கொள்வனவுத் தீர்மான இலக்கம் CA/PRO/2015/13 இன் மூலம் 2015 மார்ச் 03 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அத்திகதிக்கு முன்னர் 2015 பெப்ரவரி 16 ஆந் திகதி வரையிலும் நில அளவை நடவடிக்கைகளுக்காக ரூபா 300,000 தொகை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கும், ரூபா 23,197 தொகை அனுராதபுர மாவட்ட நிலஅளவை அதிகாரிக்கும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) The Seminar on Cultural and Globalization Asia மாநாட்டிற்கு பங்குபற்றுவதற்கு அழைப்பு விடுக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் ஒழுங்கமைப்பாளர்களினால் விமானப் பயணச்சீட்டு செலவினம், உணவு, தங்குமிடம் மற்றும் உள்ளக போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட வேண்டுமெனக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக அமைச்சிலிருந்து இணைந்த படிகள் மற்றும் அமையப் படியாக 2012 ஆம் ஆண்டின் போது அமெரிக்க டொலர் 1530 அதாவது ரூபா 195,000 ஆன தொகை உத்தியோகத்தருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்றதாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) பயிலுனர்களை வெளிநாட்டிற்கு அனுப்பும் போது அந்த விடயம் தொடர்பான திறன்களையுடைய முகாமையாளர்கள் அல்லது உதவி முகாமையாளர்கள் பங்குபற்றச் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த விடயம் தொடர்பான திறன்களை அல்லது அனுபவத்தைக் கொண்டிராத உத்தியோகத்தர்கள், முகாமையாளர்கள் அல்லது உதவி முகாமையாளர்கள் தொடர்ச்சியாக பங்கு பற்றியிருந்தனர். அதன் பிரகாரம் பங்குபற்றிய 05 உத்தியோகத்தர்களுக்கு 2013 ஆம் ஆண்டின்போது ரூபா 616,780 தொகையும், 07 உத்தியோகத்தர்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,246,330 தொகையும், 07 உத்தியோகத்தர்களுக்காக 2015 யூன் 30 ஆந் திகதி வரையில் ரூபா 1,261,192 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. விடய அறிவு மற்றும் கலையாற்றலையுடைய உத்தியோகத்தர்களை அந்த செயற்பாடுகளில் பங்குபற்றச் செய்தல் தொடர்பில் அமைச்சினாலும் தொடர்புடைய நிறுவனத்தினாலும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆதிவாசி மக்களின் கலாசாரத்தைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய இலங்கையின் ஆதிவாசிகளின் பாரம்பரிய வைத்தியம் மற்றும் ஏனைய சம்பிரதாய அனுபவங்கள் தொடர்பான அனுபவக் கற்கை மற்றும் மேம்படுத்தலுக்காக பண்டாரநாயக்க ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவகத்துடன் அமைச்சினால் பின்வரும் நோக்கங்களுக்காக 2009 திசெம்பர் 16 ஆந் திகதி முதல் 2010 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதற்காக 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை ரூபா 3,247,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(i) ஆதிவாசி மக்களுக்குச் சொந்தமான மருத்துவ முறை, உணவு பழக்கவழக்கம் மற்றும் பாரம்பரிய அனுபவ அறிவை மேம்படுத்துதல்.

(ii) ஆதிவாசிகள் பயன்படுத்தும் மருத்துப் பொருட்களை சரியாக இனங்காணல், பயன்படுத்துதல், பாதுகாத்தல் பயிரிடல் தொடர்பான கற்கையும் மேம்படுத்தலும்.

(iii) ஆதிவாசிகளின் கலாசாரம் மற்றும் கட்டும் சுகாதாரப் பாதுகாப்பு முறை / மந்திரம் தொடர்பான கற்கையும் மேம்படுத்தலும்.

(iv) ஆதிவாசிகளினால் பயன்படுத்தப்படுகின்ற தாவரங்களின் நிலைபேறான பாவனை மற்றும் மனித உளவியல் விடயம் தொடர்பான முக்கியத்துவம்

(v) ஆதிவாசி கிராமங்களை அமைப்பதற்காக சுதேச வைத்தியத் துறையின் பங்களிப்பு

(இ) 2012 நவம்பர் 06 ஆந் திகதி இலங்கையின் ஆதிவாசிகளின் பாரம்பரிய உரிமைகள் தொடர்பான ஆராய்ச்சி நூலின் கையெழுத்துப் பிரதி, அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அந்த நூல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கைக் காலத்தில் இடைக்கிடையே உரிய மேற்பார்வையும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளும் அமைச்சினால் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் இந்த நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை.

**3.8 மனித வள முகாமைத்துவம்**

---

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

---

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 23 | 22 | 01 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 04 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 638 | 545 | 93 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 468 | 539 | - | 71 |
| | மொத்தம் | 1,134 | 1,110 | 95 | 71 |

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலையில் வெற்றிடங்கள் 1 வீதமும், இரண்டாம் நிலையில் 93 வெற்றிடங்களும் காணப்பட்டன. அமைய அடிப்படையில் 114 நிலையப் பாதுகாவலர்கள் ஆட்சேர்க்கப்பட்டமையால் ஆரம்ப நிலையின் மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 71 ஆகும்.

(ஆ) தாபனவிதிக் கோவையின் II ஆவது அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவு, நிதிப் பிரமாணம் 71(1) மற்றும் நிதிப்பிரமாணம் 71(2) இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக கலாசார நிலையத்திற்காக அமைய அடிப்படையில் பாதுகாவலர்கள் சேர்க்கப்பட்டு 2014, 2015 மற்றும் 2016 யூலை 30 வரை முறையே ரூபா 114,882,051 ரூபா 25,785,823 மற்றும் ரூபா 8,017,971 தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன.